**செ. கு. எண்**:30 **நாள்**:16-1-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 16.1.2012

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, பொன்னாங்குறிச்சி கிராமத்தில் இன்று **(16.1.2012)** திருச்செந்தூரிலிருந்து திருநெல்வேலி சென்ற ஆம்னி வேன் மீது, திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் சென்ற அரசு பேருந்து மோதியதில் ஆம்னி வேனில் பயணம் செய்த மூன்று குழந்தைகள் உட்பட எட்டு நபர்களும், சாலையில் நடந்து சென்ற ஒரு பெண்ணும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள இவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் காலமானவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருபவருக்கு **25,000/–** ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**